*கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்*
*கடவுளைப் பரப்புபவன் அயோக்கியன்*
*கடவுளை வணங்குபவன் காட்டுமிராண்டி*
*- ஈ.வெ.ரா. பெரியார் -*



ஒரு கணம் நில்லுங்கள்! தயவு செய்து ஒரு நிமிடம் மூளையைக் கசக்கிச் சிந்தியுங்கள்; உலகத்திலேயே உருப்படாத இருபத்தெட்டு நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இடம் பிடித்துள்ளது. முப்பது வருடங்களாகத் தொடரும் யுத்தத்தால் ஈழத்தின் ஒவ்வொரு அங்குல நிலமும் சாவின் நிலமாக மனிதப் புதைகுழிகளாக மாறியுள்ளது. பெருவாரியான மக்கள் பட்டினிச் சாவின் விளிம்பில் நின்றுகொண்டிருக்கிறார்கள். எம் தேசத்து மழலைகள் உணவிற்காகவும் உடுக்க ஒரு முழம் துணிக்காகவும் சர்வதேசத் தொண்டு நிறுவனங்களிடம் கையேந்திக்கொண்டிருக்கின்றார்கள். இங்கிருந்து சென்று ரெட்பானாவும், ஒக்ஸ்போமும், செஞ்சிலுவைச் சங்கமும் எம் தேசத்து மக்களுக்கு வயிற்றுக்கு சோறிடும்போது, நீங்கள் இங்கிருந்து குளவிக்கல்லை ஒத்த பாழாய்ப்போன கடவுள் சிலைகளுக்குப் பாலாபிசேகமும் தேனாபிசேகமும் செய்து கூத்தாடிக்கொண்டிருப்பது நியாயமானதுதானா? தொண்டர்படைகள் அங்கே உயிரை துச்சமென மதித்துக் கண்ணிவெடிகளை அகற்றிக்கொண்டிருக்கும்போது நீங்கள் இங்கே தெருவில் தேங்காய் அடித்து வீரவிளையாட்டுக்கள் நிகழ்த்திக்கொண்டிருப்பது அறிவார்ந்த செயலாகுமா? யோக்கியமாகுமா? எம் தேசத்தின் தெருக்களிலே இடையறாது பிண ஊர்வலங்கள் சென்று கொண்டிருக்கையில் நீங்கள் பணத்தை இலட்சக்கணக்கில் செலவு செய்து தெருத்தெருவாக காட்டுமிராண்டிகள்போல கையில் தீச்சட்டியும் முதுகில் அலகும் குத்தி சாமி ஊர்வலம் விடுவதில் ஏதாவது அர்த்தமுள்ளதா?

ஆயிரம் வேலும் வாளுமாக 'போஸ்' கொடுக்கும் இந்தச்சாமிகள் ஏன் இறந்துகொண்டிருக்கும் எம்மக்களை காப்பாற்றவில்லை. ஆயிரம் அற்புதங்களை நிகழ்த்தியதாகச் சொல்லப்படும் இந்தக் கடவுள்களின் அற்புதங்கள் ஏன் யுத்த பூமிகளில் நிகழ்த்தப்படவில்லை? எம்மீது ஒரு வெள்ளைக்காரத் தொண்டு நிறுவன மருத்துவருக்கு இருக்கும் கரிசனைகூட ஏன் இந்தக் கடவுள்களுக்கு இல்லை? ஏனென்றால் கடவுள் இல்லை! கடவுள் இல்லவே இல்லை!

ஓர் அகதிச் சமூகம் தான் தஞ்சம் புகுந்துள்ள நாட்டில் தனது அரசியல் உரிமைகளுக்காக, தமது தாயக தேசத்தில் நசுக்கப்படும் உறவுகளின் உரிமைக்காகத் தெருக்களிலே இறங்கி ஆர்ப்பாட்டங்களையும், ஊர்வலங்களையும் இடையறாது நடத்தவேண்டுமே அல்லாமல், அகதியாக வந்த போது கூடவே தம்மோடு எடுத்து வந்த மூடப்பழக்கங்களையும் வந்த இடத்தில் தேடிக்கொண்ட பகட்டுக்களையும் தெருக்களில் நின்று புகலிடத் தேச மக்களுக்கு வெளிச்சம் போட்டுக்காட்டக் கூடாது. இவை உங்களின் கலாச்சாரப் பெருமையாக ஒரு போதும் கொள்ளப்படாது. இது ஒரு பண்பாட்டு வளர்ச்சியற்ற, அரசியல் உணர்வற்ற மக்களின் கோமாளித்தனமாகவே இந்நாட்டு மக்களால் விளங்கிக்கொள்ளப்படும் என்பதைத் தயவு செய்து விளங்கிக் கொள்ளுங்கள். கடவுள் என்ற பெயரால் கோயில் முதலாளிகளுக்குக் கொடுக்கும் ஒவ்வொரு சதத்தையும் எம் தேசத்தில் அல்லலுறும் மக்களுக்குக் கொடுப்பது எப்படியென்று சிந்தியுங்கள். மூலைக்கு மூலை வியாபாரத்திற்காகத் தோன்றியிருக்கும் கோயில்களை நிராகரியுங்கள். இந்து மதத்தை ஒழிக்காமல் சமூக ஏற்றத் தாழ்வுகளை, பெண்ணடிமைத்தனத்தை அழிக்க முடியாது எனக் கூறிய அம்பேத்கரின் வார்த்தைகளை நெஞ்சில் நிறுத்தி வையுங்கள். மதம் ஒரு அபின் என்ற கார்ல் மார்க்ஸின் வார்த்தைகளை நீங்கள் மறந்து விடக்கூடாது. ஆயிரம் கோயில்களைக் கட்டுவதைவிட அங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தலே உங்கள் ஆன்மாவை ஒளிரச் செய்யும்.

*- பெரியார் கல்வி வட்டம் - பிரான்ஸ் -*
*03.07.2006*